Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# திருப்பாவையில் காணப்படும் இசை, நடனம் மற்றும் கலாச்சாரங்கள்

19

முனைவர் அ.ஸ்ரீவித்யா,
தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, திருவையாறு.

சங்க காலம், காப்பியக் காலத்தினைத் தொடர்ந்து கி.பி.7ஆம் நூற்றாண்டு முதல் தொடர்ந்து வரும் காலங்கள் பக்தி இலக்கியக் காலங்களாகவே கொள்ளலாம். ஏனெனில் தேவார, திவ்ய ப்ரபந்த வாக்கேயக்காரர்கள் முதல் இன்று வரை பல வாக்கேயக்காரர்களும் இசை கொண்டு பக்தி உணர்வினை வெளிப்படுத்தி வருகின்றனர். இவர்களில் திருப்பாவை, நாச்சியார் திருமொழியினை இயற்றி அருளியவர் ஸ்ரீ ஆண்டாள். இவர் கண்ணனையே தன் கணவனாக அடைய வேண்டி அவரையே நினைந்திருந்து தன் மணாளனாகக் பெற்றவர். இவரின் திருப்பாவைப் பாடல்கள் முழுவதும் பண்ணமைப்போடு கூடிய இசைப் பாடல்களாகும். இப்பாடல்களில் பல பக்தி பாவங்கள், இசைச் செய்திகள் மற்றும் பண்பாட்டுக் கலாச்சாரங்கள் பற்றிய பல செய்திகள் காணப்படுகின்றன. இவற்றினை எடுத்துக்கூறும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

**ஆய்வுச் சுருக்கம் :**

திருப்பாவையில் காணப்படும் பக்திப் பாவங்கள் சான்றுகளுடன் தரப்பட்டுள்ளன. மேலும் திருப்பாவையில் காணப்படும் இசைக் கருவிகள், நடனம் மற்றும் அன்றாடம் மேற்கொள்ளும் பல கலாச்சார அறச்செய்திகள் எடுத்துக் காட்டப்பட்டுள்ளன.

**தரவுச் சொற்கள் :**

பக்தி பாவம், சங்கு, குடக்கூத்து, விடியற்காலை பணிகள் போன்றவை.

**முன்னுரை :**

சிவபெருமானைப் போற்றி பாடியவர்கள் சைவக் குரவர்கள் என்றும், அவர்களால் பாடப்பட்ட பதிகங்கள் பன்னிரு திருமுறைகளாகப் போற்றப்படுகிறது. சைவக் குரவர்கள் **63** நாயன்மார்களாவர். இவர்களில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் ஆகிய மூவர் பாடிய பதிகங்கள் தேவாரம் என்ற பெயரில் இராஜராஜ சோழன் காலத்தில், நம்பியாண்டார் நம்பி அவர்களால் தொகுக்கப்பட்டதாகும்.

திருமாலைப் போற்றிப் பாடியவர்கள் பன்னிரு ஆழ்வார்கள் ஆவர். இவர்களின் பாடல்கள்

பாசுரங்கள் எனப் போற்றப்படுகின்றன. அவைகள் மொத்தம் நாலாயிரம் ஆகும். இவை ‘நாலாயிர திவ்யப் பிரபந்தம்’ என அழைக்கப்படுகிறது. இவற்றில் மூன்றாவது ஆயிரம் தவிர மற்ற மூன்று ஆயிரங்களும் இசைப்பாக்களாகும். மூன்றாவது ஆயிரம் இயல்பாவாகும். நாலாயிர திவ்யப் பிரபந்தம் நாதமுனி அவர்களால் தொகுக்கப்பட்டதாகும். இவற்றில் ஆண்டாளின் நாச்சியார் திருமொழி மற்றும் திருப்பாவை முதல் ஆயிரத்தில் உள்ளது.

**ஆண்டாள் :**

பன்னிரு ஆழ்வார்களில் பெணபாற் புலவர் ஆண்டாள். பெரியாழ்வாரால் துளசி செடியின் கீழ் கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டவர். சிறு வயது முதலே திருமாலின் மீது அதீத பக்தி கொண்டு அவரையேக் கணவனாக அடைய வேண்டி நோன்பிருந்து திருமாலை மணந்தவர். இவருக்கு சூடிக்கொடுத்த சுடர்க்கொடி, கோதை எனப் பல பெயர்கள் உண்டு. இவர் நாச்சியார் திருமொழி, திருப்பாவை ஆகியவற்றினை இயற்றியவர்.

**நாச்சியார் திருமொழி :**

ஆண்டாளால் இயற்றப்பட்ட இந்நூல் 143 பாடல்களைக் கொண்டது. நாயக, நாயகி பாவத்தில் அமைந்தது. கண்ணனைத் தனது நாயகனாகக் கொண்டு அவனை அடையத் துடிக்கும் தவிப்பைச் சொல்லும் இந்நூல் ஒவ்வொன்றும் பத்துப் பாடல்களைக் கொண்டு 14 தலைப்புக்களில் அமைந்துள்ளது.

**திருப்பாவை :**

கன்னிப் பெண்கள் நல்ல கணவன் வேண்டி மார்கழி மாதம் 30 நாட்களும் பாவை நோன்பிருந்து பாடும் பாடல்கள் திருப்பாவைப் பாடல்களாகும். இப்பாடல்களில் இசை, இசைக்கருவிகள் மற்றும் அறநெறிகள் குறித்த செய்திகள் நிறைந்து காணப்படுகின்றன. இப்பாடல்கள் கண்ணனைப் போற்றிப் பாடி, பெண்களை காலை துயில் எழுப்பும் விதமாகப் பாடப்பட்டுள்ளது. இன்றும் ஆண்டாளின் திருப்பாவையும், மாணிக்கவாசகரின் திருவெம்பாவையும் மார்கழி மாதத்தில் பாடப்பட்டு வருகிறது.

**திருப்பாவையில் பக்தி பாவம் :**

திருப்பாவைப் பாடல்களில் இறைவனிடம் காட்டும் பக்தி பாவங்கள் பரிபூரண நிலைகளில் காட்டப்பட்டுள்ளன. திருவடிப் புகழ் பாடிடுவோம் என பாதசேவன பக்தி பாவத்தினை ஆண்டாள் கூறியுள்ளார்.

வையத்துள் வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்

செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்

பையத் துயின்ற பரமன் அடி பாடி

கண்ணனைப் பாடி தொழுதிடுவோம், இராமனைப் பாடிடுவோம், நாராயணனைப் பாடிப் பரவிடுவோம் என இசை கொண்டு இறைவனை வணங்கிடுவோம் என பல பாடல்களில் கீர்த்தனை பக்தி பாவத்தினால் பக்தியைப் பறை சாற்றுகின்றார் ஆண்டாள்.

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி

மாயனை, மன்னு வடமதுரை மைந்தனை என்ற பாடலில் இறைவனை தூமலர் தூவித் தொழுது, வாயினால் பாடி, மனதினால் சிந்திக்க வேண்டும் என்பதில் இறைவன் மீது காட்டும் பக்தி பாவத்தில் அவனை அர்ச்சித்து, பாடி, மனம் அவனை சதா ஜபித்து கொண்டே இருக்கக்கூடிய ஸ்மரண பாவத்தினை எடுத்துக் காட்டுகிறார்.

ஆயர்குலத்தினில் தோன்றும் அணிவிளக்கைத்

தாயைக் குடல் விளக்கஞ் செய்த தாமோதரனைத்

தூயோமாய் வந்து நாம் தூமலர் தூவித் தொழுது

வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்க

கீசுகீசு என்று எங்கும் என்ற திருப்பாவைப் பாடலில் நாராயணன், மும்மூர்த்திகளின் தலைவன், கேசவன் என அனைவரும் கண்ணனைப் பாடிடும் ஒலி உனக்கு காதினில் விழவில்லையா எனும் இடத்தில் ச்ரவண பாவத்தின் முக்கியத்வத்தை எடுத்துக் காட்டியுள்ளார் ஆண்டாள்.

நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன், மூர்த்தி

கேசவனைப் பாடவும் நீ கேட்டே கிடத்தியோ?

'தூமணி மாடத்து' என்ற திருப்பாவையில் மாமாயன், மாதவன், வைகுந்தன் என்றென்று நாமம் பலவும் நவின்றேலோர் எம்பாவாய் என நாமங்களைச் சொல்வோம் என நாம மகிமையை பறை சாற்றுகின்றார். இதில் ஸ்மரண பாவம் வெளிப்படுவதைக் காணலாம்.

'நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய' என்ற திருப்பாவைப் பாடலில் பெண்கள் நந்தகோபன் அரண்மனைக் காப்போனிடம் கூறுவதாக, கண்ணனை நாங்கள் பள்ளி எழுச்சிப் பாடி எழுப்பிட வேண்டும் கதவை திறந்து விடு என்பதில் தாஸ்ய பாவம் தொனிக்கிறது,

ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை

மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்

தூயோமாய் வந்தோம்! துயிலெழப் பாடுவான்

அம்பரமே! தண்ணீரே! என்ற பாவைப் பாடலில் ஸக்ய பாத்தில் பலதேவரை அழைத்து உன் தம்பியை எழுப்பு என உரிமையுடன் குரல் கொடுக்கின்றனர் ஆயமகளிர்.

செம்பொன் கழலடிச் செல்வா! பலதேவா!

உம்பியும் நீயும் உறங்கேலோர் எம்பாவாய்!

'ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப' என்ற திருப்பாவைப் பாடலில் 'ஆற்றாது வந்துன் அடிபணியு மாபோலே போற்றி யாம் வந்தோம்! புகழ்ந்தேலோர் எம்பாவாய்!' என பாதத்தினை தொழுதிடும் பாதசேவனம் பிரதிபலிக்கிறது.

'அன்றில் உலகம் அளந்தாய் அடிபோற்றி' என்ற பாடலில் இறைவனின் பல லீலைகளைக் கூறி இறைவனை போற்றிப் பரவுகிறார்கள் பெண்கள். இதில் இறைவனை அடைக்கலமாய் அடைந்து ஆன்மீக உணர்வுடன் வணங்கக்கூடிய வந்தன பாவம் காணப்படுகிறது.

'ஒருத்தி மகனாய்ப் பிறந்து' என்ற திருப்பாவையில் உன்னை அர்ச்சித்து வந்தோம் என அர்ச்சனை பாவத்தின் மகிமையினைக் கூறியுள்ளார்.

நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை

அருந்தித்து வந்தோம் பறை தருதியாகில்

'சிற்றஞ் சிறுகாலை' பாடலில் என்றும் நாங்கள் உன்னுடைய நெருங்கிய உறவினர்களாக இருப்போம் என்பதில் ஸக்ய பாவமும், உமக்கே தொண்டு செய்து வாழ்வோம் என்பதில் தாஸ்ய பாவமும் மேலிடுகிறது.

என்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு

உற்றாமே யாவோம்! உனக்கே நாம் ஆட்செய்வோம்!

இந்த திருப்பாவைப் பாடல்கள் யாவுமே கண்ணனைப் பாடிப் பரவினால் நாடு செழிக்கும். வளம் பெருகும். செல்வம் மிகும். தங்களின் எண்ணங்கள் யாவும் ஈடேறும் எனத் திட்டவட்டமான ஆத்ம நம்பிக்கையுடன் கண்ணனைப் பாடிப் பணிகின்றனர் பெண்கள். இதில் கண்ணனிடம் அவர்களின் சரணாகதியான ஆத்மநிவேதன பாவம் ஒவ்வொரு பாடலிலும் பிரதிபலிப்பதைக் காணமுடிகிறது.

இசைக்கருவிகள் :

சங்கு இசைக் கருவி பற்றிய குறிப்பு திருப்பாவைப் பாடல்களில் காணப்படுகிறது. மார்கழி மாதம் விடியல் காலையில் சங்கினை முழங்கும் வழக்கம் இருப்பதை இதில் காணமுடிகிறது. பதினான்காவது திருப்பாவையான 'உங்கள் புழைக்கடை' என்பதில்

செங்கல் பொடிக் கூறை வெண்பல் தவத்தவர்

தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்

செங்கற்பொடி போன்ற நிறமுடைய காவி உடையும், வெண்மையான பற்களும் உடைய தவசிகன் அவர் வழிபடும் திருக்கோயிலுக்குச் சங்கு ஊதிடச் சென்று கொண்டிருக்கின்றரே! காதில் விழவில்லையா? என்ற குறிப்பு காணப்படுகிறது.

'மாலே மணிவண்ணா' என்ற பாடலில் கண்ணனுடைய பாஞ்சஜன்யம் போன்றே பிற சங்குகளும் புகழ் பெற்றன என்ற குறிப்பு

பாலன்ன வண்ணத்துன் பாஞ்ச சன்னியமே

போல்வன சங்கங்கள்! போய்ப்பாடு உடையனவே

காணப்படுகிறது.

**நடனம் :**

திருப்பாவையில் ஆண்டாள் திருமால் குடக்கூத்தாடிய செய்தியை 'கீழ்வானம் வெள்ளென்று' என்ற பாடலிலும், 'மாலே மணிவண்ணா' பாடலிலும் குறிப்பிட்டுள்ளார். குடக்கூத்து என்பதனைத் தற்காலத்தில் கரகாட்டத்துடன் ஒப்பிடலாம்.

கூவுவான் வந்து நின்றோம்! கோது கலமுடைய

பாவாய் எழுந்திராய் பாடிப் பறைக்கொண்டு

மாவாய்ப் பிளந்தானை ………..

**திருப்பாவைக் கூறும் புராணக் கதைகள் :**

திருமாலின் வாமன அவதாரம், கேசி என்ற அரக்கனை அழித்திட கண்ணன் குடக்கூத்தாடிய கதை, பூதகியை அழித்த கதை, சகடாசுரனை அழித்த கதை, இராவணன் வதம், மலையைக் குடையாக்கி மக்களை காத்த வரலாறு போன்றவற்றைப் பற்றியக் குறிப்புக்களை குறிப்பிட்டுள்ளார் ஆண்டாள்.

கலாச்சாரம் :

இசை யாவரையும் தன்னகத்தே ஈர்த்து அதில் லயிக்கச் செய்யும் அற்புதமான கலையாகும். இசை மூலம் எந்த ஒரு செய்தியையும் எளிதாக மக்களிடையே பதிக்கலாம். அவ்வகையில் பல நல்ல கலாச்சாரங்களை திருப்பாவை எடுத்தியம்புகிறது.

மார்கழி மாதம் என்பது இறைவனின் மாதம். இம்மாதத்தில் விடியல் காலையில் எழுந்து குளித்து, வாசலில் கோலமிட்டு கோவிலுக்குச் சென்று இறைவனைத் தொழுவது பண்டைய காலம் முதல் இருந்து வருகின்ற வழக்கமாகும். அதனை இசை வழியே ஆண்டாள் கூறும்போது அதன் பலன்களோடு திருமால் லீலைகளைக் கூறி எழுந்திரு என மங்கையரை எழுப்பிடும் பாங்கு இன்றைய காலக்கட்டத்திலும் உயிரோட்டம் உள்ளதாக இருக்கிறதைக் காணலாம்.

‘வையத்து வாழ்வீர்காள்’ என்ற பாவைப் பாடலில் நெய் உண்ணோம். பாலுண்ணோம். விடியற்காலையில் குளிர்ந்த நீரில் குளித்திடுவோம். பெரியோர் வார்த்தைகளைக் கேட்போம். கோள் மூட்ட மாட்டோம். எளியவர்களுக்கு உதவி செய்திடுவோம். அறம் செய்வோம் என உறுதி கொண்டு எது எது நல்லது எனத் தோழிக்குக் கூறுவதாக ஆண்டாள் பாடியுள்ளார். இதில் கோள் மூட்ட மாட்டோம் என்பதில் தீமை தரும் கோள் எனக் குறிப்பிடுகிறார். அதே போல பெரியோர் செய்யக்கூடாது என்று சொன்ன செயல்களைச் செய்ய மாட்டோம் என்பதில் பெரியோரை மதித்திடுவோம் என்ற உறுதி தொனிப்பதைக் காணலாம்.

வையத்து வாழ்வீர்காள்! நாமும் நம்பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடி பாடி
நெய்உய்ணோம்! பாலுண்ணோம்! நாட்காலே நீராடி
மையிட்டு எழுதோம்! மலரிட்டு நாம் முடியோம்!
செய்யாதன செய்யோம்! தீக்குறளை சென்றோதோம்!
ஐயமும் பிச்சையும் ஆந்தனையு; கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்தேல் ஓர் எம்பாவாய்!

‘கற்றுக் கறவை’ என்றப் பாடலில் முல்லை நிலத்துக் கோவலர்கள் கன்றுகளைப் பால் குடிக்கவிட்ட பின்னர்தான் பாலினைக் கறப்பர் என்ற வழக்க முறையினைக் குறிப்பிட்டுள்ளார்.

‘வங்கக் கடல்’ என்ற 30வது பாடலில் ஆண்டாள் பாடியுள்ள சங்கத்தமிழ்ப் பாமாலை முப்பதையும் பிழையின்றி இறைவன் திருமுன் பாடுவோர் மலைத் தோள் இரண்டும், அழகு முகத்தில் செங்கண்ணும், மார்பில் திருமகளும் கொண்ட திருமாலால் அருளப் பெற்று மகிழ்ந்து வாழ்வார் என்பது உறுதி என இத்திருப்பாவைப் பாடல்களைப் பாடுவதனால் வரும்

பலன்களையும் சொல்லியுள்ளார் **சூடிக்கொடுத்த நாச்சியார்.**

**முடிவுரை :**

இவ்விதமாக ஆண்டாள் தனது திருப்பாவைப் பாடல்களில் நோன்பு முறை, நல்அறங்கள், இசை, நடனம் போன்ற பல செய்திகளை தந்துள்ளார். இவைகள் இசை கொண்டு கூறப்படுவதால் சிறுவர் முதல் பெரியோர்கள் வரை அதனை ஏற்று இன்றும் மார்கழி மாதத்தில் விடியலில் எழுந்து குளித்து, வாசலில் கோலமிட்டு, கோவிலுக்குச் சென்று இறைவனைத் தொழுது பலன் பெற்று வருவதைக் காண முடிகிறது.

சான்றாதாரங்கள் :

1. தமிழர் இசை – டாக்டர் ஏ.என்.பெருமாள் - உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 1984.

2. திருப்பாவையும், திருவெம்பாவையும்(உரையுடன்) - முனைவர் ப.ஆறுமுகம் - பூம்புகார் பதிப்பகம், சென்னை – 2004

3. திருப்பாவை(ஸ்வரக்குறிப்பு, விளக்கவுரை) – கலைநன்மணி திருமதி.மைதிலி கண்ணன் - ஆமு'ள அகாடமி ஆப் கிளாசிக்கல் மியூசிக், தஞ்சாவூர் - 2012.